# SAINT JOHN BAPTIST DE SALLE

APRIL 7



ஏப்ரல் 7

# *புனித பாப்டிஸ்ட் தெலசால் அருளப்பர் (1651-1719)*

இவர் குருவாக விரும்பினார். குருப் பட்டம் பெறும் முன்னரே இவருக்கு ஓர் உயர் பதவி கிடைத்தது. கிறிஸ்தவ பள்ளிகளின் சகோதரர்கள் (F.S.C) எனும் சபையை இவர் ஏற்படுத்தினார். இதற்கு எடுத்துக்காட்டு மூன்று நிகழ்ச்சிகள்: (1) இவர் ஒரு மடத்தில் கல்வி கற்கும்போது ஓர் இயக்கத்தில் சேர்ந்தர். அந்த இயக்கத்தின் நோக்கம், பிரான்ஸ் நாட்டில் இளைஞர்களுக்கு சிறந்த ஆசிரியர்களைத் தர கடவுளை மன்றாடுவது. (2) இவருடைய நண்பரும் ஆன்ம குருவுமான ரோலண்டு சுவாமியார் அகதி பெண்களுக்கு கல்வி கற்பிக்கும்படி சில ஆசிரியர்களை நியமித்திருந்தார். அவர் சாகும் நேரம் வந்தது. தம் வேலையை தொடர்ந்து கவனிக்கும்படி தம் இளம் குருவை அவர் கேட்டுக்கொண்டார். (3) அத்ரியான் நயல் என்பவர் பிரான்ஸ் நாட்டின் சிறுவர்களுக்கு கல்வி கற்பித்துவந்தார். ரீம்ஸ் நகரில் மாத்திரமல்ல, பிரான்ஸ் நாடெங்கும் சிறுவர்களுக்கு பள்ளிக்கூடங்களைத் தொடங்க அவர் விரும்பினார். இதில் நம் இளம் குருவின் உதவியை அவர் நாடினார்.

போர்களால் பிரான்ஸ் நாடு அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. பள்ளிக்கூடங்கள் கவனிக்கப்படவில்லை. அறியாமையும், தீமையும் எங்கும் நிலவின. ஏழை மக்களை கவனிப்பாரில்லை. இவர் ஏழைச் சிறுவர்களைச் சேர்த்து தம் இல்லத்திலேயே வைத்து உணவு அளித்து அவர்களின் சுமையைக் குறைத்தார். அலவசமாய் அவர்களுக்கு கல்வி கற்பித்தார். ஆசிரியர்களை ஒவ்வொரு நாளும் சந்தித்துப் பேசி நன்கு கல்வி கற்பிக்கும் முறையை எடுத்துக் கூறி ஊக்குவிப்பார். இவர் தொடங்கிய சபை உலகமெங்கும் பரவியுள்ளது. நம் நாட்டிலும் இச்சபை இருக்கிறது.

**சிந்தனை:**

"இச்சபைச் சகோதரர்கள் ஆர்வம் நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும். மாணவரின் உள்ளங்களில் தேவ பயத்தை ஊன்ற வேண்டும். மாசின்மையை அவர்கள் காப்பாற்ற வழிவகைகளை கற்பிக்க வேண்டும். பாவத்தில் விழாமல் அவர்களைக் காக்கவும், ஆர்வத்துடன் உழைக்கவும் வேண்டும்". (புனித ஜாண் பாப்டிஸ்ட் தெலசால்)

**செபம்:**

ஆண்டவரே, எங்கள் நாட்டுக்கு தேவ பயமுள்ள, சிறந்த ஆசிரியர்களைத் தாரும்.